# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் செவ்வாய்கிழமை 05ம் நாள் சாட்சியாகிய கணேஷ்அரிபாபு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேஷ்அரிபாபு | வயது | 45 |
| த/பெ. | கிருஷ்ணமூர்த்தி | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இரயில்வேயில் வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.12/2021**

( மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>குறுக்கு விசாரணை 05.08.2025 எ.ம.சா.1</u>**

1. நான் இரயில்வே துறையில் எந்த ஊரில் வேலை செய்கிறேன் என்றால் சென்னையில் வேலை செய்கிறேன். நான் இளநிலை பொறியாளராக வேலை செய்கிறேன். என்னுடைய திருமணமானது பெற்றோர்களால் செய்து வைத்த திருமணம் என்றால் சரிதான். 2008ம் ஆண்டு எனது திருமணத்திற்கு பிறகு நானும், மனுதாரரும் எங்கு வாழ்ந்து வந்தோம் என்றால் அரக்கோணத்தில் உள்ள எனது சொந்த வீட்டில் வாழ்ந்து வந்தோம்.

2. என்னுடன் வேறு யார் வீட்டில் இருந்தார்கள் என்றால் எனது அம்மா, தம்பி மற்றும் தம்பியின் மனைவி இருந்தார்கள். நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் ஒரே வீட்டில் ஒன்றாகதான் வாழ்ந்து வந்தோமா என்றால் முதலில் ஒன்றாகதான் வாழ்ந்து வந்தோம். அதன்பிறகு ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நாங்கள் தனித்தனி போர்சனில் வசித்து வந்தோம். எனது தம்பிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2011ம் ஆண்டு நடைபெற்றது.

3. எனது குடும்பத்திற்குள் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் திருமணமாகி 3 மாத கால கட்டத்தில் பிரச்சனை ஏற்பட்டது. என்னுடைய திருமணம் மூலமாக எனக்கும் எனது மனைவிக்கும் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். நான் மற்றும் எனது மனைவியும் எனது தம்பி குழந்தைகளைத்தான் தத்து எடுத்தோம் என்றால்

சரிதான். என்னுடைய தம்பிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை.

4. எனக்கும், எனது மனைவிக்கும் 13 ஆண்டுகள் குழந்தை இல்லாத காரணத்தினால் எங்களுடைய பாதுகாப்பிற்காக எனது தம்பி குழந்தைகளை நான் தத்தெடுத்ததாக எ.ம.சா.ஆ.3 மற்றும் எ.ம.சா.ஆ.4 ல் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். குழந்தைகளை எனக்கு தத்து கொடுத்த பிறகு எனது தம்பிக்கு யார் பாதுகாப்பு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. எனது மனைவி எனது அம்மாவையும், என்னையும் கொடுமைபடுத்தியது எந்த காலகட்டத்தில் என்றால் திருமணமாகி மூன்று மாதங்களில் இருந்து. நான் மாண்புமிகு அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் எனது மனைவிக்கு எதிராக HMOP 184/2021 என்ற விவாகரத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி உண்மையாகவே என்னையும், எனது குடும்பத்தையும் திருமணமாகி மூன்று மாத காலத்தில் கொடுமைபடுத்தி இருந்தால் அப்போதே விவாகரத்து வழக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு கொடுமை நடைபெறவில்லை என்பதால்தான் 13 ஆண்டுகள் கழித்து மேற்படி விவாகரத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. எனது மனைவி என்னுடன் சேர்ந்து வாழ்வதற்காக (Restitution of conjugal rights) மாண்புமிகு அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் HMOP 21/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நானும், எனது மனைவியும் சேர்ந்து இருந்த காரணத்தினால்தான் இரண்டு குழந்தைகளையும் தத்து எடுத்தோம் என்றால் சரிதான். இன்றைய தேதியில் நானும் எனது மனைவியும் தான் மேற்படி இரண்டு குழந்தைகளுக்கும் தகப்பனார், தாயார் என்றால் சரிதான்.

7. எனக்கும் எனது மனைவிக்கும் விவாகரத்து ஏற்பட்டால் மேற்படி குழந்தைகளை தத்து எடுத்தற்கான ஆவணங்கள் செல்லாமல் போய்விடும் என்றால் சட்டப்படி அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது குழந்தைகளை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் நான்தான் பராமரித்து வருகிறேன். எனக்கு 24 மணிநேரமும் இரயில்வேயில் வேலை இருக்கும் என்றால் ஆம். 24 மணி நேரமும் நான் பணியில் இருந்தால் எனது குழந்தைகளை யார் பராமரித்து கொள்கிறார் என்றால் 24 மணி

நேரமும் வேலை இருக்காது அவரசமாக அழைத்தார்கள் என்றால் வேலைக்கு செல்ல வேண்டும்.

8. நான் அவசரமாக வேலைக்கு சென்றால் குழந்தைகளை யார் கவனிப்பார்கள் என்றால் அவர்கள் வளர்ந்து விட்டதால் அவர்களே பார்த்துக்கொள்வார்கள். மேற்படி குழந்தைகள் இருவரும் இளவர்கள் என்றால் சரிதான். என்ன படிப்பு படித்து வருகிறார்கள் என்றால் மகன் 9ம் வகுப்பும், மகள் 7ம் வகுப்பும் படித்து வருகிறார்கள். எந்த பள்ளியில் இருவரும் படிக்கிறார்கள் என்றால் பாரதிதாசனார் மெட்ரிக்மேல்நிலை பள்ளியில் படிக்கிறார்கள்.

9. நான் தத்து எடுத்த எனது மகள் 16.04.2014 அன்று தான் பிறந்து இருந்தார் என்றால் தற்போது எனது மகள் 5ம் வகுப்புதான் படித்திருக்க முடியும். வழக்கிற்காக எனது மகள் 7ம் வகுப்பு படிப்பதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல 7ம் வகுப்புதான் படிக்கிறார். அதேபோல் என்னுடைய மகன் 02.01.2012 அன்று தான் பிறந்து இருந்தார் என்றால் தற்போது எனது மகன் 7ம் வகுப்புதான் படித்திருக்க முடியும். வழக்கிற்காக எனது மகன் 9ம் வகுப்பு படிப்பதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல 9ம் வகுப்புதான் படிக்கிறார்.

10. நான் குடியிருக்கும் வீட்டில்தான் என்னுடைய தம்பி மற்றும் தம்பி மனைவி, குழந்தைகளும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் ரயில்வேயில் வேலை செய்வதால் என்னுடைய பணிப்பதிவேட்டில் குழந்தைகளை சேர்ப்பதற்காக வெறும் ஆவணம் வாயிலாக குழந்தைகளை தத்தெடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் நல்ல முறையில் வாழ்ந்து வந்த போது 18.12.2020ம் தேதி அன்று தான் குழந்தைகளை தத்து எடுத்தோம் என்றால் சரிதான்.

11. 2020ல் குழந்தைகளை தத்து எடுத்தபிறகு 2021ல் மாண்புமிகு அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி என் மீது ஜீவானம்சம் வழக்கு தாக்கல் செய்யவே நான் மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன். நான் குழந்தைகளை தத்துஎடுத்த பிறகுதான் என் மனைவியுடன் சேர்ந்து வாழவில்லை என்றாலும், உறவினர்கள் வந்து கேட்ட பிறகும் நான் சேர்ந்து வாழவில்லை என்றாலும் சரியல்ல.

12. நான் இவ்வழக்கில் எனது முதன்மை சாட்சியத்தோடு 16.07.2025 அன்று எதிர்மனுதாரர் தரப்பில் 4 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

எனக்கு மாதம்தோறும் ரயில்வே துறையில் இருந்து சரியாக சம்பளம் வந்து விடும் என்றால் சரிதான். அதேபோல சம்பள பில்லும் சரியாக வந்து விடும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.1ல் 2023 டிசம்பர் மாத சம்பள பில்லை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2ல் 2023 ஜனவரி மாத சம்பள பில்லை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

13. நான் நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தற்போது எனக்கு வரும் சம்பள பட்டியலை தாக்கல் செய்யாமல் 2023 ஜனவரி மற்றும் டிசம்பர் சம்பள பட்டியலை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் அதைப்பற்றி யாரும் கேட்கவில்லை அதனால் நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் உள்ள எ.ம.சா.ஆ.1 முதல் 4 வரை உள்ள ஆவணங்களை யார் சொல்லி நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய வழக்கறிஞர் கூறியதால் தாக்கல் செய்தேன்.

14. தற்போது நான் பிடித்தம் போக எவ்வளவு சம்பளம் வாங்குகிறேன் என்றால் 32 ஆயிரம் ஆகும். என்னுடைய மொத்த வருகை (Total Gross of income) எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. நான் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.1ல் என்னுடைய மொத்த வருகை ரூபாய் 91,453 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய முந்தைய மாத சம்பள பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் ஆம். நான் எனது மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்தால் எனது மனைவி இந்த வழக்கை வாபஸ் வாங்கி கொள்வார் என்றால் எனக்கு எனது மனைவியுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை. என்னுடைய மனைவி நான் குழந்தைகளை பார்க்க அனுமதிக்காததால் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

15. குழந்தைகளை தன்னுடைய சுவாதினத்தில் எடுத்துக்கொள்வதற்கு என்னுடைய மனைவி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் போகிறார் என்றால் அது அவருடைய விருப்பம்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I(FAC),

Arakkonam.